MCOP-100/2012

Dated : 13.10.2022

Time: 11.58 a.m. To 12.06 P.m.

P.W. - 1 ராமர் சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு மா.சா.ஆ.4 மற்றும் மா.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.

4ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்குவிசாரணை

**1.** விபத்தில் இறந்து போனவர் என் மகன். 2ம் மனுதாரர் என்னுடைய மனைவி. என் மகன் நெல்அறுக்கும் எந்திர வாகனத்தில் கிளினராக பணி செய்து வந்தார். அந்த வண்டி பஞ்சர் ஆகி சாலையில் நின்றுவிட்டது. அந்த நின்று இருந்த வாகனத்தின் மீது தான் அரசு பேருந்து வேகமாக வந்து மோதி விட்டது. அவ்வாறு மோதியதில் என் மகன் விபத்துக்கு உள்ளாகி இறந்துவிட்டார். அந்த விபத்திற்கு காரணம் மேற்சொன்ன அரசுபேருந்தின் ஓட்டுநர் தான்.

2. என் மகன் விபத்தின் தொடர்ச்சியாக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். அவர் மாதம் 5ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் முன் நிறுத்தவில்லை. நான் அதிகப்படியான இழப்பீடை மனுவிற்காக கோருகிறோம் என்றும், எனவே அது நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து காரணம் அரசு பேருந்து தான் தவிர நெல் அறுக்கும் இயந்திர வாகனம் அல்ல. நாங்கள் இழப்பீடு கோர வேண்டும் என்றால் 1 ,2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராகத்தான் கோரவேண்டும் என்றும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd- K.Ananthan,**

**Subordinate Judge,**

**Attur.**